# விளம்பரம்

## பனம்பொருள் அபிவிருத்திச்சபை

### கருத்தரங்கு

### பொருட்காட்சியும்

பனம்பொருள் அபிவிருத்திச்சபை பனம் பொருள் அபிவிருத்தி, தரமான பனம்பொருட்கள் உற்பத்தி ஆகிய விடயங்கள் பற்றிய கருத்தரங்கு ஒன்றை 1979 டிசெம்பர் 26-ம், 27-ம் திகதிகளில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தவுள்ளது. இக் கருத்தரங்கைத் தொடர்ந்து 27-ந் திகதிமுதல் 29-ந் திகதிவரை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் பொருட்காட்சி ஒன்றும் இடம்பெறும்.

மேற்படி கருத்தரங்கில் அல்லது பொருட்காட்சியில் பங்குபற்ற விரும்புவோர் பனம்பொருள் அபிவிருத்திச்சபைத்தலைவருடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் தலைவர், பனம்பொருள் அபிவிருத்திசபை, தேசியவீடமைப்புசெயலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 20-12-1979ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

நா. கனகசூரியர்
பதில் தலைவர்.

4330


---

முதலாவது ஆண்டு

## நினைவு அஞ்சலி

### திரு. வே. இ. தம்பிப்பிள்ளை அவர்கள்

உரிமையாளர்: வே. இ. தம்பிப்பிள்ளை வர்த்தக நிறுவனம்,
கண்டி வீதி, கிளிநொச்சி.



தோற்றம் 22-11-1928 — மறைவு 22-11-1978

### நாளை நினைவுதினம்

ஆண்டுத் திதியான 11-12-79 அன்று அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் என்றும் அமைதிபெற்று சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி வே. இ. தம்பிப்பிள்ளையும்,
புத்திர, புத்திரிகளும், சுற்றத்தாரும்.

காலயுத்தி ஆண்டு கார்த்திகையா ருந்திகதி
சாலச் சிறந்த புதன் அட்டமியில் - கோலமார்
மன்னனும் தம்பிப்பிள்ளை மண்ணுலகை
விட்டகன்று
மன்னினன் விண்ணுலகை மதித்து.

4322

---

## யாழ்.மாநகரசபைக்கு 34 ஆயிரம் மேலதிகவரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு இவ்வருடம் மேலதிகமாக 34 ஆயிரத்து 873 ரூபா வருமானம் கிடைக்கவுள்ளது.

1980-ம் ஆண்டுக்கான மாநகரசபையின் வரவு செலவுத் திட்டத்தின்படி சபை வருமானம் 1,8282305 ரூபாவாகும் உத்தேச செலவினம் 1,82 47430 ரூபாவாகும்.

புதியவரவு செலவுத்திட்ட யோசனைகள் தற்போது பொதுமக்கள் பார்வைக்காக யாழ் மாநகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. (கு)

---

## HONDA CD 125

## ஹொண்டா 1975/76

மோட்டல்களுக்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்

விலை ரூபா 7500/-

**நா. சாம்பசிவம் அன் கோ,**

34, 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

4278

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

ஈடு 14231

இல. 6, புது வீதி, கொய்யாத்தோட்டம் காலஞ்சென்ற சந்தியோகுப்பிள்ளை

மார்க்கு ஜோசப் வழக்காளி

809, அளுத்மாவத்தை ரோட், முத்துவால், கொழும்பு

சந்தியோகுப்பிள்ளை மார்க்கு அல்பிறட் பதில் வழக்காளி

எதிராக

38, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
1. மாணிக்கம் செல்லத்துரையும் பெண்
2. அன்னு லீ யோசபீனா எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 14231ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980ம் ஆண்டு (3-1-80) தை மாதம் 3ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்கு நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வை தொகை முதல் வட்டி ரூபாய் 5254/ 10-12-73 தொடக்கம் 11-7-74 வரைக்கும் ரூபாய் 3700/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 478/65. இதில் ரூபாய் 2000/- தீர்வையிலும் ரூபாய் 200/- கோட்டுச் செலவாலும் கொடுக்கப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறைமாவிலிமையடியும், தென் பர 1½ விடும், இறைவும், பயிர் வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு வெளிலைமப்பேரி சாமுவேலுக்குச் சொந்த முத்தம்மாவுக்குரிய ஆதனம், மேற்கு யோசேப்பு பெண் அன்னம்மாவுக்கும் வைத்தி வேள்பிசுக்குமுரிய ஆதனம், தெற்கு சவரிமுத்து பெண் ஆச்சிமுத்தின் ஆதனம், இடையெதும்.

நா. ஸ்ரீரங்கநாதன்
விற்பனை ஆணையாளரும்,
விலை மதிப்பாளரும்

6, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
14-11-79

4325

---

## காரைநகர் வடக்கு கிராமசபை

### 1980-ம் வருடத்திற்கான கேள்வி விளம்பரம்

காரைநகர் வடக்கு கிராமசபை விசேட ஆணையாளர் அவர்களால் 1980-ம் ஆண்டுக்கான கீழ்வரும் பொருட்களை விநியோகிப்பதற்கு 1980-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந்திகதி முற்பகல் 10-00 மணிவரை அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படும் பிணைப்பணமும், மீளளிக்கப்படாத பத்திரப் பணமும் செலுத்தி 28-12-79 முற்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் பத்திரங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| 1980-ம் வருடத்திற்கான கேள்விகள் | பிணைப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூ: சு: |
| 1. மின்சார தண்ணீர்த்திட்ட உபகரணப் பொருட்கள் விநியோகம். | 200-00 | 25-00 |
| 2. சுகாதாரப் பகுதிப் பொருட்கள் விநியோகம் | 50-00 | 50-00 |
| 3. அச்சிட்ட படிவங்கள், காகிதாதிகள் எழுது கருவிகள், வண்டி, வாகன இலக்கத்தகடுகள் விநியோகம்; | 100-00 | 20-00 |
| 4. சீருடை விநியோகம். | 50-00 | 10-00 |

அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்,
காரைநகர் வடக்கு கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
காரைநகர் வடக்கு,
காரைநகர்;
1979-12-04

4326

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 374 இலக்கமுள்ள இரண்டு கடையுடன் (இலேசன் சந்தி) ஒன்றரைப் பரப்பு காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும் S. சுந்தரம்பிள்ளை 374 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

4327

---

### வழங்குநர்களையும் வேலை ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் 1980

1980-ம் ஆண்டுக்கு பின்வருவனவற்றுக்கு விண்ணப்பங்கள் எதிர்வரும் 14-12-79 காலை 9-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் அல்லது வேலை ஒப்பந்த காரர்களிடம் மட்டும் கேள்விகள் அல்லது கூறுவிலைகள் கோரப்படும். அவசியம் ஏற்படும் பட்சத்தில் ஏனையோரிடமிருந்தும் கூறுவிலைகள் அல்லது கேள்விகள் கோரப்படுவதற்கு எனக்கு பூரண அதிகாரமுண்டு

(1) மின்சார உபகரணங்களை வழங்கல்.

(2) சாரதிகளின் அச்சு வேலை, வாகனத் தகடுகள் வழங்கல்

(3) ஒப்பந்த வேலைகள் செய்தல்.

அன்ரன் அல்பிரட,
விசேட ஆணையாளர்,
ஏழாலைக் கிராமப் பிரதேசம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
ஏழாலைக் கிராமப் பிரதேசம்.

30-11-79 4328

---

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய

## அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுழிபுரம் என்னுமிடத்தைச் சேர்ந்த சுப்பர் கந்தையா என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்திவர்

வழக்கு இல. T/14

கந்தையா இராசபக்சம் சுழிபுரம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனம் எழுந்த மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதிவாக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1979-ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதிவாக்கப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1979ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ந் திகதி.

மன்றின் ஆணைப்படி
(ஒப்பம்)
பூ. அன்னலிங்கம்
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது
(ஒப்பம்)
நா. சங்கரப்பிள்ளை
மனுதாரரின் சட்டத்தரணி.

4319

# ஜெ க ஜீ வ ன் ரா மை பி ர த ம ரா க் க

# அதிமுகழகம் ஒத்துழைப்பு!

## இந்திராவையும் தேர்தல் அறிக்கை வன்மையாகக் கண்டிக்கிறது

சென்னை, டிச. 9

ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜெ ஜீவன்ராமை இந்தியாவின் பிரதமராக்குவதற்கு ஒத்துழைக்க அ. தி. மு. கழகம் உறுதிபூண்டுள்ளது என்று அதன் தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அ. தி. மு கழகத்தின் தேர்தல் அறிக்கையை நேற்றுமுன்தினம் நிதியமைச்சர் திரு கே. மனோகரன் வெளியிட்டார்.

அந்தத் தேர்தல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

"ஹரிஜன இனத்தைச் சேர்ந்த திரு. ஜெ ஜீவன்ராமை நாட்டின் பிரதமராக்குவதற்கு கழகம் பூரண ஒத்துழைப்பை வழங்கும்

"மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும்வகையில் அரசியல் சாஸனம் திருத்தப்படவேண்டும் என கழகம் வற்புறுத்தும்.

"சகல மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுவதுடன் ஆங்கில மொழியே உத்தியோக மொழியாக இருக்கும்.

"ஒவ்வொரு பிரஜைக்கும் வாக்களிக்கும் உரிமை வயது எல்லை 21லிருந்து 18ஆக குறைக்கப்படவேண்டும்.

### இந்திராவுக்கு கடும் எதிர்ப்பு

"முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சர்வாதிகாரத்தை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளையில் தி. மு. க-இந்திரா காங்கிரஸ் உறவு விசித்திரமானது என்பதையும் கழகம் சுட்டிக்காட்டுகிறது"

இவ்வாறு தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

ஜா-எல நகரசபை மைதானத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 753வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு முடிவுகள்:

1ம் பரிசு

**06 Q 0317**

ரூபா 1,00,000

2ம் பரிசு

**23 Y 0254**

ரூபா 40,000

3ம் பரிசு

**06 G 0270**

ரூபா 10,000

ரூபா 1411 சதம் 35 கொண்ட நாறு ஆறுதல் பரிசுகள் பெறும் டிக்கட்டுகள்.

| | |
|---|---|
| 12 A 0351 | 26 A 0914 |
| 01 B 0368 | 0: B 0770 |
| 25 B 0906 | |
| 04 C 0546 | 09 C 0995 |
| 12 C 0493 | 18 C 0154 |
| 19 C 0605 | 30 C 0081 |
| 30 C 0990 | |
| 13 D 0037 | 29 D 0305 |
| 03 E 0941 | 08 E 0157 |
| 10 E 0913 | 13 E 0495 |
| 13 E 0909 | 21 E 0802 |
| 29 E 0853 | |
| 01 F 0522 | 10 F 0071 |
| 04 G 0839 | 16 G 0729 |
| 20 G 0053 | 26 G 0429 |
| 07 H 0028 | 08 H [illegible]993 |
| 21 H 0260 | 28 H 0879 |
| 02 J 0008 | 10 J 0110 |
| 25 J 0359 | 28 J 0037 |
| 07 K 0716 | 21 K 0752 |
| 02 L 0251 | 03 L 0661 |
| 06 L 09[illegible]3 | 07 L 06[illegible]5 |
| 09 L 0619 | 14 L 0359 |
| 17 L 0658 | 24 L 0531 |
| 25 L 0130 | 30 L 0109 |
| 04 M 0489 | 11 M 0914 |
| 27 M 0294 | |
| 05 N 0919 | 07 N 0507 |
| 15 N 0635 | 15 N 0507 |
| 16 N 09[illegible]9 | 23 N 0013 |
| 30 O 0323 | 30 O 0825 |
| 14 P 0479 | 25 P 04[illegible]2 |
| 26 P 0423 | |
| 07 Q 0833 | 23 Q 0353 |
| 02 R 0059 | 12 R 0969 |
| 23 R 0508 | 26 R 0414 |
| 01 S 0084 | 02 S 0544 |
| 26 S 0647 | 28 S 0913 |
| 04 T 0134 | 24 T 0117 |
| 27 T 0002 | |
| 06 U 736 | 07 U 0385 |
| 16 U 0723 | 16 U 0993 |

5ம் பக்கம் பார்க்க

### விடுதலையான 2 பணயக்கைதிகள்

# கொமெய்னியிடம் 6 கோடி நஷ்டஈடு கோருகின்றனர்!

வாஷிங்டன் டிச. 6

ஈரானிய மாணவர்களால் பணயம் வைக்கப்பட்டு அண்மையில் விடுதலைசெய்யப்பட்ட இரண்டு அமெரிக்க கடற்படை வீரர்கள் ஈரானிய அரசிடமிருந்தும் அயதொல்லா கொமெய்னியிடமிருந்தும் 6 கோடி டாலர் நஷ்டஈடு கோரி வாஷிங்டன் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் 4ம் திகதி பணயம் வைக்கப்பட்ட இவர்கள் 18 திகதி விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. (இ)

# இந்திரா இரண்டு

## தொகுதிகளில் போட்டி

(புதுடில்லி)

இந்தியாவில் நடைபெறவிருக்கும் லோகசபை இடைத்தேர்தலில் முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் ரயபரேலித் தொகுதியில் போட்டியிட ஏற்கனவே வேட்புமனு தாக்கல்செய்த திருமதி காந்தி ஆந்திரப்பிரதேசத்திலிருந்தொரு தொகுதியிலும் போட்டியிட நேற்று தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்

வேட்புமனுத் தாக்கல்செய்த பின்னர் ஆந்திராவில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் திருமதி இந்திரா காந்தி பேசுகையில் தமது தொகுதியான ராய்பரேலியில் தோற்று விடுவேன் என்ற அச்சத்தினால் அல்ல ஆந்திரப்பிரதேச மக்களின் அன்பான கோரிக்கையை ஏற்றுக்கொண்டே இங்கும் போட்டியிடுகிறேன்" என்று கூறினார். (கு)

# அரபு நாடுகளின் டுனிஷிய மகாநாடு


## கூட்டு நடவடிக்கைக்கு திட்டமும் வகுக்கப்பட்டது!

(டுனிஷ்)

டுனிஷியாவின் தலைநகரில் நடைபெற்ற அனைத்து அரபு நாடுகளின் பத்தாவது உச்சி மகாநாடு, அரபு உலகின் ஐக்கியத்தை மேலும் வலுப்படுத்துவதாயமைந்தது.

இருபது அரபு நாடுகளினதும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினதும் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். அரபு நாடுகளிலுள்ள தகவல் சாதனங்கள் குறித்தும் உலகின் செய்தி நிறுவனங்கள் குறித்தும் விரிவாக இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. இஸ்ரேலுடனும், அமெரிக்காவுடனும் மிக நெருங்கிய உறவுகளைக் கொண்டிருப்பதனால் எகிப்துமேலும் தனிமைப்பட்டு வருவது குறித்து இம்மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. சதாத்தின் முயற்சிகளுக்கு ஆரம்பத்தில் ஆதரவளித்தவர்களும், பாக்தாத்தில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளாதவர்களுமான அரபுத்தலைவர்கள் கூட இம்முறை இந்த மகாநாட்டில் ஒன்றுசேர்ந்து "இஸ்ரேலுக்கெதிரான பொதுப்போராட்டம்" என்ற அரபுக்களது முக்கிய பணிக்கான பிரகடனத்துக்கு ஆதரவளித்துள்ளனர்.

டுனிஷிய மகாநாட்டில், பாலஸ்தீனப்பிரச்சினை உட்பட, மத்தியகிழக்குப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாணவேண்டுமென்று வலியுறுத்தலுடன் அரசியல், வர்த்தக- பொருளாதார, இராணுவ, ராஜதந்திர கலாசாரத்துறைகளில் அரபு நாடுகளின் கூட்டு நடவடிக்கைகளுக்கான ஒரு திட்டமும் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.


# தமறேன்

அனைத்தையும் அழிப்பது

தமறேன் 60% எல். சீ. நவீன சிறப்புள்ள கிருமிநாசினி. அது பல விதங்களில் செயற்படும். பூச்சிகளின் உடல் முழுவதும் செறிந்தும், நிலைத்து நின்றும், பட்ட மாத்திரத்திலும் உட்சென்று தாக்கியும் செயற்படும் பல சிறப்புகள் கொண்டது. கொறிக்கும், உறிஞ்சும், துளைக்கும் பூச்சி புழுக்களையும், மூட்டுப் பூச்சி, அழுகணவன், வண்டு, அந்துப்பூச்சி, மயிர்க்குட்டி, இலைப்பூச்சிகள், தாவர மூட்டுப் பூச்சிகள், இலைத் துந்து வெட்டிகள், சந்துக்குத்திகள், மற்றும் நெல், பருத்தி, நாரத்தை முதலாம் புளி மரங்கள், காய்கறிகள், மிளகாய், கரும்பு, அவரை, சோளம், உருளைக்கிழங்கு. வெங்காயம், புகையிலை, கனி மரங்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றைத் தாக்கும் எல்லாப் பூச்சி இனங்களையும் கட்டுப்படுத்த உலகெங்கும் தமறேன் பரவலாகப் பாவிக்கப்படுகிறது.

தமறேன் பல முனைச் சக்தி கொண்டதாகையால், பல்வேறு விதமான பூச்சியினத் தாக்குதலுக்கு ஆளாகும் பயிர்களுக்குப் பாவிக்க அது மிகவும் ஏற்றது.

பாவியுங்கள்

BAYER

தரமான பீடை நாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்

50, பொஸ்டர் ஒழுங்கை

கொழும்பு 10.

தொலைபேசி: 93563

